பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி02 திங்கட்கிழமை 16.06.2025 கதிர் 219

### இது ரகசியம் அல்ல!

உள்ளூராட்சி மன்ற தேர்தல் பெறுபேறுகளின் பிரகாரம் கொழும்பு மாநகர சபையில் ஆட்சி செய்ய எந்தவொருகட்சிக்கும்பெரும்பான்மை கிடைக்கவில்லை. அதனால் ☞ 2

17 சபைகளையும் கைப்பற்றுவோம் என

## வீர வசனம் பேசியவர்கள் கண்முன்பே சாவகச்சேரியை வென்று காட்டினோம்

### தமிழ் காங்கிரஸ் உறுப்பினர் வெற்றிப் பிரதாபம்

(சுபேசன்)

யாழில் உள்ள 17 உள்ளூராட்சி மன்றங்களையும் கைப்பற்றுவோம் என வாய் வீரம் பேசியவர்களின் கண் முன்னாடியே சாவகச்சேரி நகரசபையை வென்று காட்டியுள்ளோம் எனச் சாவகச்சேரி நகரசபையின் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினர் பிரணவராசா ☞ 2

## வவுனியாவில் சபைகளை பகிர்வதில் தமிழ்க் கட்சிகள் இடையே இணக்கம்

### ஐக்கிய மக்கள் சக்தியும் உடன் இணைந்தது

வவுனியாவில்உள்ளநான்குஉள்ளூராட்சிசபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பில் தமிழ் கட்சிகள் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகியவற்றுக்கு இடையில் பொது இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு இடையில் தமிழ் அரசுக் கட்சியின் வவுனியா அலுவலகமான தாயகத்தில் நேற்று இடம்பெற்றது.

கலந்துரையாடலில் கலந்துகொண்டதமிழ்அரசுக்கட்சி, ஜனநாயகதமிழ்த்தேசியகூட்டணி, ஐக்கிய மக்கள் சக்தி, ஜனநாயக தேசிய கூட்டணி ஆகியவற்றின் பிரநிதிகளுக்கிடையில் ☞ 6

# வவுனியா மாநகர சபை முதல்வராக காண்டீபன்

## பதில் முதல்வராக கார்த்தீபன் பெயரிட்டன தமிழ்க் கட்சிகள்




வவுனியா மாநகரசபைக்கான முதல்வர், பதில் முதல்வர் தெரிவுகள் இன்று இடம்பெறவுள்ள நிலையில்ஜனநாயகதமிழ்த்தேசியகூட்டணியின் உறுப்பினர் முதல்வராகவும், பிரதி முதல்வராக ஜனநாயக தேசிய கூட்டணியின் உறுப்பினரது பெயரும் பிரேரிக்கப்படவுள்ளதாக தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் அவரது அலுவலகத்தில் நேற்று மாலை செய்தியாளர்களிடம் இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் ☞ 2

## வடக்கில் இன்று பலத்த காற்று

புத்தளம் முதல் மன்னார், காங்கேசன்துறை வழியாக முல்லைத்தீவு வரையிலான கடற்கரையோரப் பகுதிகளுக்கு இன்று பிற்பகல் 2.30 மணி வரையில், பலத்த ☞ 8

## தெற்கில் மீண்டும் துப்பாக்கிச் சூடு

கொஹுவல பொலிஸ் பிரிவின் களுபோவில விகாரை வீதியில் அமைந்துள்ள வீடொன்றின் மீது மோட்டார் சைக்கிளில் பிரவேசித்த அடையாளம்தெரியாத இரண்டு நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

நேற்று அதிகாலை இந்தச் துப்பாக்கிச் சூடு நடந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபர்கள் வீட்டின் வாயிலிலும் வீட்டை நோக்கியும் துப்பாக்கிச் சூடு நடத்தினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கிச் சூட்டில் ☞ 6

## வவுனியா மாநகரசபையில் நாமே ஆட்சியமைப்போம்

### தேசிய மக்கள் சக்தியும் அறிவிப்பு

வவுனியா மாநகரசபையின் ஆட்சியை தாங்களே கைப்பற்றுவோம் எனதேசியமக்கள்சக்திதெரிவித்துள்ளது.

இன்றுவவுனியாமாநகரசபைக்கான முதல்வர்,பிரதி முதல்வர் தெரிவுகள் இடம்பெறவுள்ள நிலையில் இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று வன்னிபிளாசா விடுதியில் நேற்று இடம்பெற்றது.



தேசிய மக்கள் சக்தி, இலங்கை தொழிலாளர் கட்சி மற்றும் சுயேச்சைக் குழுவின் பிரதிநிதிகள் குறித்த கலந்துரையாடலில் பங்கு பற்றியிருந்தனர்.

இதன்பின்னர் கருத்து தெரிவித்த தேசிய மக்கள் சக்தியின் மாநகரசபை உறுப்பினர் சிவசங்கர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் சில தரப்புக்களுடன் பேசியிருக்கின்றோம். இணக்கப்பாடுகளும் எட்டப்பட்டுள்ளது. அந்தவகையில் தேசிய மக்கள் சக்தியால் சிறந்த ஒரு அதிகாரத்தை வழங்க முடியும் என்று ☞ 2

## முன்னால் அமைச்சரின் 3 நிறுவனங்களை பகிரங்க ஏலத்தில் விற்க நீதிமன்றம் முடிவு

முன்னாள் அமைச்சர் தயா கமகேவுக்கு சொந்தமானதாகக் கூறப்படும் மூன்று நிறுவனங்கள் பகிரங்கமாக ஏலத்தில் விற்பதற்கு கொழும்பு வணிக மேல் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

ஜூலை 2 காலை 10 மணிக்கு இந்த ஏலம்நடைபெறும்எனகொழும்புவணிக மேல் நீதிமன்றத்தின் பதிவாளரான பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

தனியார் நிதி நிறுவனம் ஒன்றுக்குச் செலுத்தப்படவேண்டிய 104,229,342 ரூபாய் தொகையை வசூலிக்கும் நோக்கில் இந்த மூன்று ☞ 6

## சபைகளில் யாருக்கு ஆதரவு என்பதை தமிழ் முற்போக்கு கூட்டணி அறிவிக்கும்

### ஆட்சியை பிடிக்க எவருக்கும் அதிகாரம் கிடையாது என்கிறார் திகா

உள்ளூராட்சி மன்றங்களில் அதிகாரத்தை நிறுவ யாருக்கும் தனி அதிகாரம்வழங்கப்படவில்லைஎன்றும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் ஆதரவு இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கா அல்லது தேசிய மக்கள் சக்திக்கா வழங்கப்படும் என்பது குறித்து அறிவிப்பு வெளியிடப்படும் ☞ 6

## மருந்துகள் போதியளவில் உண்டு சுகாதார பதிலமைச்சர் விளக்கம்

மத்திய மருந்துக் களஞ்சிய சாலையில் 180 மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பினும் நோயாளிகளுக்கு வழங்கப்படும் மருந்துகளுக்கான பற்றாக்குறை ஏற்படாது. பிரதேச மருந்து களஞ்சியசாலையில்தேவையான மருந்துகள் உள்ளதுடன் தேவை ஏற்படின் அவற்றை வெளியில் கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுகாதார மற்றும் வெகுசன ஊடக பதில் அமைச்சர் ஹன்சக விஜேமுனி தெரிவித்தார்

மருந்து பற்றாக்குறைத் தொடர்பில் செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் உள்ள அரச மருத்துவ மனைகளில் உயர்தர மருந்துகளுக்கு தட்டுபாடு ஏற்பட்டுள்ளதாகஒருசிலதரப்பினர் ஊடகங்கள்வாயிலாகவதந்திகளை பரப்பிவருகின்றனர்.உண்மையில் அரச மருத்துவ மனைகளில் அவ்வாறு நீரிழிவு மற்றும் உயர் குருதியமும் உள்ளிட்ட நோய்களுக்கு வழங்கப்படும் மருந்துகளுக்கு எவ்வித தட்டுப்பாடும் ஏற்படவில்லை. எனினும் குறிப்பிட்ட ஒரு சில மருந்துவிநியோகநடவடிக்கைகள் ஸ்தம்பித்துள்ளமைத் தொடர்பில் தெரியவந்துள்ளது.

அவற்றை சீரமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டுள்ளன. இது இன்று ☞ 6

## மேலதிக நேர கொடுப்பனவுக்கான திருத்த சுற்றறிக்கை வராவிட்டால் பணி நிறுத்தம்

### அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவிப்பு

வைத்தியர்களின் மேலதிக நேர கொடுப்பனவு திருத்தங்கள் தொடர்பான சுற்றறிக்கை உடனடியாக வெளியிடப்படாவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

மேலதிக நேரக் கொடுப்பனவு திருத்தங்கள்தொடர்பானசுற்றறிக்கைகள் உடனடியாக வெளியிடப்படாவிட்டால், ஜூலை மாதம் வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதிப்போம் என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சங்கத்தின் உதவிச் செயலாளரும் ஊடகப் பேச்சாளருமான சமில் விஜேசிங்க, இதுதொடர்பாககொழும்பில் செய்தியாளர்களிடம் நேற்றுப் ☞ 2

## இனி இது .....

ஏனையகட்சிகளி ஆதரவைபெற்றுக்கொண்டு மாநகர சபையில் ஆட்சி அமைப்பதற்கு ஆளும்தரப்பு தீவிர முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. அதேபோன்றுஎதிர்க்கட்சியில்அதிக ஆசனங்களை பெற்ற கட்சி என்றவகையில் ஐக்கிய மக்கள் சக்தியும் ஏனைய கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சியமைப்பதற்கு முயற்சித்து வருகிறது. ஒரு மாதத்துக்கும் அதிக காலமாக இதுதொடர்பாக இந்த இரண்டு கட்சிகளும் தாங்கள்தான் ஆட்சி அமைக்கப்போவதாக தெரிவித்துவரும் நிலையில், யார் ஆட்சி அமைக்கப்போகிறனர் என்ற கேள்விக்கு இன்று விடை கிடைத்துவிடும்.

மேயரை தெரிவு செய்வதற்காக கொழும்பு மாநகர சபை இன்று காலை மாநகர ஆணையாளர் தலைமையில் கூடுகிறது. உள்ளூராட்சி மன்ற தேர்தலில் கொழும்பு மாநகரசபையில்மொத்தமாக 117 ஆசனங்கள் உள்ளன. அதில் தேசிய மக்கள் சக்திக்கு 48 ஆசனங்களும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்திக்கு 29 ஆசனங்களும் கிடைக்கப்பெற்றன. ஏனைய கட்சிகள் மற்றும் சுயாதீன குழுக்களுக்கு மொத்தமாக 40 ஆசனங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதன் பிரகாரம் ஆட்சி அமைப்பதற்கு 59 ஆசனங்கள் தேவைப்படும் நிலையில் எந்த கட்சிக்கும் தனித்து ஆட்சி அமைக்க முடியாதுள்ளது. இந்நிலையில், கொழும்பு மாநகரசபையில்ஆட்சிஅமைப்பதற்கு தேசிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஏனையகட்சிகளின்ஆதரவைபெற்றுக்கொள்ள கடும் முயற்சிகளை மேற்கொண்டு வந்தன.

ஐக்கிய மக்கள் சக்தியை பொறுத்தவரை, கொழும்பு மாநகர சபைக்கு போட்டியிட்டு ஆசனங்களை பெற்றுக்கொண்டுள்ள ஐக்கிய தேசிய கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், சிறிலங்கா பொதுஜன பெரமுன, பொதுஜன ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகளின் ஆதரவை கோரி இருப்பதுடன் சுயேட்சை குழுக்களுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தி இருப்பதாகவும் அவர்களின் ஆதரவு நிச்சயமாக கிடைக்க இருப்பதாகவும் ஐக்கிய மக்கள்சக்திநாடாளுமன்றஉறுப்பினர்முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார். அதேநேரம் கொழும்பு மாநகர சபையில் எதிர்க்கட்சி ஆட்சி அமைப்பதற்கு ஆதரவளிப்பதாக 13 ஆசனங்களை பெற்றுக்கொண்டுள்ள ஐக்கிய தேசிய கட்சி, 5ஆசனங்களை பெற்றுக்கொண்டுள்ள சிறிலங்கா பொதுஜன பெரமுன, 1ஆசனம் பெற்றுக்காண்டுள்ள பொதுஜனஐக்கியமுன்னணிபோன்றகட்சிகள் பகிரங்கமாகஅறிவித்துள்ளன. 4ஆசனங்களை பெற்றுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவும் எதிர்க்கட்சிக்கே வழங்கும் என்றே தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் மாநகர சபைக்கு போட்டியிட்ட சுயேச்சை குழுக்களுக்கு மொத்தமாக 9ஆசனங்கள்கிடைக்கப்பெற்றுள்ளன. அதில் 3 பேர் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளிப்பதாக பகிரங்கமாக அறிவித்திருக்கின்றனர். ஏனையவர்களின் ஆதரவைபெற்றுக்கொள்ள பிரதானஇரண்டுகட்சிகளும்கடும்முயற்சியில் ஈடுபட்டு வருகின்றன.

கொழும்பு மாநகர சபையில் ஆட்சி அமைப்பதற்கு தேசிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கியமக்கள்சக்திஆகியஇரண்டுகட்சிகளும் கடும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றன. அதற்காகஏனையகட்சிகள்மற்றும்சுயேற்சை குழுக்களின் ஆதரவை பெற்றுக்கொள்வதற்கு இரகசிய பேச்சுக்களை ஆரம்பித்துள்ளன.

அதேநேரம் ஆளும் தேசிய மக்கள் சக்தி கொழும்புமாநகரசபையில்ஆட்சியமைப்பதற்கு அவர்களுக்கு இன்னும் 8 ஆசனங்களே தேவைப்படுகின்றன.

கொழும்புமாநகரசபைஇன்றுகாலை 9.30 மணிக்கு மாநகர ஆணையாளர் தலையில் கூடுகிறது. இதன்போது, மேயர் தெரிவுக்கு வாக்களிப்பு இடம்பெறும். இதன்போது தேசிய மக்கள் சக்தி, ராய் பல்தசாரை பிரேரிக்க இருப்பதுடன் எதிர்க்கட்சியில் இருந்து ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் ரிஸா ஶருக்கை பிரேரிக்க தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இவர்களில் யார் அதிக வாக்குகளை பெற்று மேயராக தெரிவாகப்போகிறார் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## வவுனியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

21 உறுப்பினர்களை கொண்டுள்ள வவுனியா மாநகரசபையில் ஆட்சி அமைப்பதற்கு 11 ஆசனங்கள் தேவை. ஆட்சியமைப்பதற்கானவாய்பைஉருவாக்கும் வகையில்தமிழ்கட்சிகளினால்புரிந்துணர்வு உடன்பாடு ஒன்று எட்டப்பட்டிருந்தது.

அதற்கமைய ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டணி பெற்றுக்கொண்ட நான்கு ஆசனங்களும், தமிழ் அரசுக்கட்சி பெற்றுக்கொண்ட மூன்று ஆசனங்கள், ஐக்கியமக்கள்சக்தியின்இரண்டுஆசனங்கள், ஜனநாயகதேசியகூட்டணியின்ஒருஆசனம், அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் ஒரு ஆசனம்என11ஆசனங்கள்கைவசம்உள்ளன.

எட்டப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியில் தெரிவுசெய்யப்பட்டிருந்த முன்னாள்நகரசபை உறுப்பினரும், ஆசிரியருமான காண்டீபன் முதல்வராக பெயரிடப்படவுள்ளார்.

ஜனநாயகதேசியகூட்டணிசார்பில்தெரிவு செய்யப்பட்ட ஊடகவியலாளர் கார்த்தீபன் பிரதி முதல்வராகப் பெயரிடப்படவுள்ளார்.

இந்த நிலையில் குறித்த கூட்டுக்கு ஆட்சி அமைக்கத் தேவையான 11ஆசனங்கள் உறுதியாகியுள்ள நிலையில் இன்று எதிர்பார்க்கப்பட்டபடி இந்தக்கூட்டே ஆட்சியமைக்கும்எனதெரிவித்தார். எனினும் எதிரணியான தேசிய மக்கள் சக்தி வசமும் 10 ஆசனங்கள் இருக்கின்ற நிலையில். கடைசி நேரத்தில் எதுவும் நடக்கலாம் என்கிற நிலமையே நீடிக்கின்றது. 100

## வீர வசனம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி நகரசபையின் ஆட்சியதிகாரத்தை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஆதரவுடன் கைப்பற்றிய பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சாவகச்சேரி நகர சபையை தமிழ் தேசிய பேரவை வெற்றிகொண்டுள்ளது. திருவுளச் சீட்டு மூலம் தவிசாளர் மற்றும் உபதவிசாளர் தெரிவு இடம்பெற்ற போதிலும் இருவருமே தமிழ்த் தேசிய பேரவையைச் சேர்ந்தவர்கள் என்பது பெருமைக்குரிய விடயம்.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் நகரசபை உறுப்பினர் ஒருவருக்கு இறுதி நேரத்தில் நீதிமன்றம் இடைக்கால தடை விதித்திருந்த நிலையில் நாம் ஆட்சியைக் கைப்பற்றுவது சவாலாக இருந்தபோதிலும் இறை ஆசியுடன் திருவுளச் சீட்டு மூலம் வெற்றியடைந்தோம்.

யாழில் உள்ள 17உள்ளூராட்சி சபைகளையும் தம்வசமாக்குவோம் என கூறியவர்கள் முன்பாகவே நாம் எமது வெற்றியைப் பதிவு செய்திருந்தோம்.

எதிர்வரும் நான்கு வருட காலம் எந்தவிதமான பாகுபாடும் இன்றி அனைவரையும்ஒன்றிணைத்துசேவையை வழங்குவோம். எம் மீது நம்பிக்கை வைத்து வாக்களிக்க மக்களுக்கு உண்மையாக இருப்போம் எனவும் மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

## வவுனியாவில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொது நோக்கம் ஒன்றை அடிப்படையாக கொண்டு வவுனியாவில் உள்ள நான்கு சபைகளிலும் இணைந்து ஒரு நிர்வாகத்தை உருவாக்குவதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

அந்த வகையில், வவுனியா மாநகர சபையில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணிக்கு மாநகர முதல்வர் பதவியும், பிரதி முதல்வர் பதவி ஜனநாயக தேசிய கூட்டணிக்கும்முதல்இரண்டுவருடங்களுக்கும் வழங்கப்படும். தமிழ் அரசுக் கட்சிக்கு அடுத்த இரு வருடங்களுக்கும் அந்தப் பதவிகள் வழங்கப்படும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையில் தவிசாளர் பதவி தமிழ் அரசுக் கட்சிக்கும், உபதவிசாளர் பதவி ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணிக்கும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உபதவிசாளர் பதவியை இரண்டு வருடங்களுக்குப் பகிர்வது தொடர்பாக ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியும், ஐக்கிய மக்கள் சக்தியும் தொடர்ச்சியாக பேச்சு நடத்தத் தீர்மானிதுள்ளன.

அத்துடன், வவுனியா வடக்கு பிரதேச சபையில் தமிழ் அரசுக் கட்சிக்கு தவிசாளர் பதவியும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சிக்கு உபதவிசாளர் பதவியும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெங்கல செட்டிகுளம் பிரதேச சபையில் ஐக்கிய மக்கள் சக்திக்கு தவிசாளர் பதவியும், தமிழ் அரசுக் கட்சிக்கு உபதவிசாளர் பதவியும்

# வெளிநாட்டு ஒதுக்கீட்டு நிதி மதிப்பை மிகைப்படுத்தி வெளியிட்டது இலங்கை

### வெரிட்டே ரிசேரச் நிறுவனம் கண்டுபிடிப்பு

இலங்கை ஆளும்தரப்பு அறிவித்துள்ள உத்தியோகபூர்வ வெளிநாட்டு ஒதுக்கீடு சுமார் 1.4 பில்லியன் அமெரிக்க டொலரினால் மிகைப்படுத்தப்பட்டுள்ளதாக ஆய்வொன்றில் வெளிக்கொணரப்பட்டுள்ளது.

சீன மக்கள் வங்கியுடன் (People's Bank of China – PBoC) உள்ள 10 பில்லியன் (அ.டொலர் 1.4) பெறுமதியான நாணய பரிமாற்றத்தை ஒதுக்கீடாக கருதியமையால் இந்த நிலைமை உருவாகியுள்ளதாக வெரிட்டே ரிசேர்ச் ஆய்வு நிறுவனம் மேற்கொண்ட

ஆய்வில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இது தற்போது சர்வதேச அளவில் வெளிநாட்டு ஒதுக்கீடாக கருதப்பட வேண்டிய தரநிலையை பூர்த்தி செய்யவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த நிறுவனம் மேற்கொண்டுள்ள ஆய்வில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சர்வதேச நாணய நிதியம் வெளியிட்டுள்ள (Balance of Payments Manual, 6th edition) அறிக்கைக்கு அமைய வெளிநாட்டு சொத்து இருப்பானது திரவத்தன்மையை கொண்டிருக்க வேண்டும் அல்லது நிபந்தனையற்ற முறையில் உடனடியாகக் கிடைக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

ஆனால் நாணய பரிமாற்றம் இதனை நிறைவேற்ற தவறியுள்ளது. ஏனெனில் பல்வேறு நிபந்தனைகளுக்கு உட்டுபட்டு காணப்படுகின்றது. எதிர்காலத்தில் குறித்த நிபந்தனைகள்நீக்கப்படுவதற்கானசாத்தியமும் காணப்படுகின்றது. அந்த வகையில் வெளிநாட்டு ஒதுக்கீடாக அங்கீகரிக்கப்படாத சொத்துகளைச் சேர்ப்பதனால் இலங்கையின் உத்தியோகபூர்வ வெளிநாட்டு ஒதுக்கீடு மிகைப்படுத்தப்பட்டுள்ளதாகவே கருதப்படுகின்றது.

உதாரணமாக 2025 மே மாதத்தில் மத்திய வங்கி அறிவித்த உத்தியோகபூர்வ ஒதுக்கீடு 6.3 பில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. சர்வதேச தரநிலைக்கேற்ப கணக்கிட்டிருந்தால் இது சுமார் 4.9 பில்லியன் அமெரிக்க டொலராக இருந்திருக்க வேண்டும்.

மேலும் இந்த தவறான கணக்கீட்டைப் பயன்படுத்தி அரசியல்வாதிகளும் அரச அதிகாரிகளும் இரண்டு விதமான கணக்கீடு களை (சீன மக்கள் வங்கி) சேர்த்ததும் சேர்க் காததும்பயன்படுத்திஒருகாலப்புள்ளியிலிருந்து மற்றொரு காலப்புள்ளிவரை வெளிநாட்டு ஒதுக்குகளின் அதிகரிப்பை ஒப்பிட்டு மதிப்பீடு செய்ய முயற்சித்துள்ளனர்.

இதனால் 2022 ஏப்ரல் மாதத்திற்கு பின்னர் வெளிநாட்டு ஒதுக்கங்களின் அதிகரிப்பு தொடர்பில் தவறான தகவல்கள் பகிரப்பட்டுள்ளன. சர்வதேச தரநிலைகளுடன் ஒத்துபோகும்பரிந்துரைக்கப்பட்டஅணுகுமுறை என்னவெனில் IMF தனது

ஊழியர்அறிக்கைகளில்'பயன்படுத்தக்கூடிய வெளிநாட்டு ஒதுக்கம் ((usable reserves" )' எனக் குறிப்பிடும் மதிப்பை அடிப்படையாகக் கொண்டு ஒப்பீடு செய்வதே ஆகும். இதில் பரிமாற்ற ஒப்பந்தம் மற்றும் வெளிநாட்டு ஒதுக்க சொத்துகளுக்கான வரையறையை பூர்த்தி செய்யாத எந்தவொரு சொத்தும் உள்வாங்கப்படாது.

# கொழும்பில் இன்று ஆட்சியமைப்போம் தேசிய மக்கள் சக்தி நேற்று திட்டவட்டம்

கொழும்பு மாநகரசபையில் ஆட்சியமைப்பதற்கு மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு அதிகாரத்தை வழங்கியிருக்கின்றனர். அதற்கமைய இன்று நாம் கொழும்பில் ஆட்சியமைப்போம் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அதனை விடுத்து சஜித், நாமல் இணைந்து ஆட்சியமைப்பதாகக் கூறினால் அது கொழும்பு மக்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும் என சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

தம்புத்தேகம வைத்தியசாலை வளாகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பு மாநகரசபையில் ஆட்சியமைப்பதற்கு மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு அதிகாரத்தை வழங்கியிருக்கின்றனர். எமது குழுக்களையே நாம் தேர்தலில் களமிறக்கியிருந்தோம். எதிர்க்கட்சி என்றஒன்று போட்டியிடவில்லை. வெவ்வேறு கொள்கைகள், வெவ்வேறு வேலைத்திட்டங்களுடன் ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசிய கட்சி, பொதுஜன பெரமுன என ஒவ்வொரு கட்சிகளும் தனித்தே போட்டியிட்டன.

அந்த வகையில் கொழும்பு மாநகர சபையில் ஆட்சிமைப்பதற்கான மக்கள் ஆணை எமக்கே கிடைத்திருக்கிறது. கொழும்பை அடிப்படையாகக் கொண்டு ஆளும்தரப்பு பல்வேறு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குதிட்டமிட்டிருக்கிறது. எனவே கொழும்பு மாநகரசபையின் அதிகாரம் தேசிய மக்கள் சக்திக்கு கிடைக்க வேண்டியது அத்தியாவசியமானதாகும். எனவே சஜித், நாமல் போன்றோர் இணைந்து கொழும்பில் ஆட்சியமைப்பதாகக் கூறினால் அது கொழும்பு மக்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும்.

எனவே தேசிய மக்கள் சக்திக்கு வாய்ப்பளித்து அவர்கள் விலகிக் கொள்வதே சிறந்தது. அவ்வாறில்லை என்றாலும், நாமே ஆட்சியமைப்போம். நாம் யாருடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்திருக்கின்றோம், எமக்கு ஆதரவளிப்பவர்கள் யார் என்பதை மேயர் தெரிவின் போது அறிந்து கொள்ள முடியும். எமக்கு 50 சதவீதம் இல்லாவிட்டாலும், பெரும்பான்மையைப் பெற்றுள்ளோம். அந்த வகையில் பார்த்தாலும் மக்கள் ஆணையை எமக்கே வழங்கியிருக்கின்றனர். நாம் கொழும்பில் ஆட்சியமைப்போம் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை என்றார்.

எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த கலந்துரையாடலில் தமிழ் அரசுக் கட்சி சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம், ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான றிசாட் பதியூதீன், முத்து முகமது, ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி சார்பில் முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினர்சிவசக்திஆனந்தன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் மயூரன், ஜனநாயக தேசிய கூட்டணி சார்பில் சிறி ரெலோ கட்சியின் செயலாளர் நாயகம் உதயராசா, ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர் துளசி உட்படப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

## மேலதிக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேசியபோது இதனைத் தெரிவித்தார்.

நீண்ட காலமாக மேலதிக நேரக் கொடுப்பனவு தொடர்பான திருத்தங்களை ஆளும்தரப்பிடம் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கோரிவருகின்றது. இந்த கொடுப்பனவு, வைத்தியர்கள் மேற்கொள்ளும் மேலதிக பணிச்சுமைக்கு ஈடாக வழங்கப்படும் நிதி உதவியாகும். எனினும், இதற்கான சுற்றறிக்கைகள் இதுவரை உரிய முறையில் வெளியிடப்படவில்லை என சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

செய்தியாளர்கள் சந்திப்பில் உரையாற்றிய சமில் விஜேசிங்க, 'அரச வைத்தியர்களின் கூடுதல் கடமைகளுக்கு உரிய அங்கீகாரம் வழங்கப்படவேண்டும். இது தொடர்பான சுற்றறிக்கைகள் உடனடியாக வெளியிடப்படாவிட்டால், எமது சங்கம் ஜீன் 30க்குப் பின்னர் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட வேண்டிய நிலை ஏற்படும். இது நோயாளர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தினாலும், ஆளும்தரப்பின் உடனடி நடவடிக்கையின்மையேஇதற்குக்காரணமாக இருக்கும்,' என்றார்.

## மருந்துகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று அல்ல இந்நாட்டில் நீண்ட காலமாக இருந்து வரும் பிரச்சனையாக உள்ளது. ஆகையால் அதற்கு முழுமையான

தொடர்ச்சி 6 ம் பக்கம்.....

காலைக்கதிர் Kalaikkathir

# கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அத்தியாவசியமற்ற மருந்துகளுக்கு தட்டுப்பாடு

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அத்தியாவசிய மற்றும் அத்தியாவசியமற்ற மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன் வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படும் சிரிஸ்கான், எம்.ஆர்.ஐ. ஆகிய கதிரியல் பரிசோதனைகளும் குறிப்பிடத்தக்களவு குறைவடைந்துள்ளன. வைத்தியசாலைக்கு வருகைத் தரும் நோயாளர்கள் இதனால் கடும் அசௌகரியத்துக்குள்ளாகியுள்ளனர் என்று மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பின் தலைவர் வைத்தியர் சமல் சஞ்சீவ தெரிவித்தார். நேற்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பு தேசிய வைத்தியசாலைத் தொடர்பில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் உள்ள பிரதான வைத்தியசாலையாக கொழும்பு தேசிய வைத்தியசாலை உள்ளது. எனினும் தற்போது வைத்தியசாலையில் சிகிச்சைப்பெற வரும் நோயாளர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது. வைத்தியசாலை கையிருப்பில் இருக்க வேண்டிய அத்தியாவசிய மருந்துகளான நோய் எதிர்ப்பு மருந்துகள், மயக்க மருந்து, தொற்று நோய் மற்றும் தொற்றா நோய்க்காக வழங்கப்படும் மருந்துகளுடன், அத்தியாவசியமற்ற மருந்துகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அத்தோடு வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படும் சிரி, எம்.ஆர்.ஐ ஆகிய கதிரியல் பரிசோதனைகளும் குறிப்பிடத்தக்களவு குறைவடைந்துள்ளது. பரிசோதனை அறிக்கைகளை வழங்குவதற்கான கணினி இணைப்பில் ஏற்பட்டுள்ள கோளாறு காரணமாக இவ்வாறானதொரு நிலை உருவாகியுள்ளது. எனினும் உரிய தரப்பினர் இது தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளையும் இதுவரை முன்னெடுக்கவில்லை.

இந்நிலையில் சிகிச்சைக்காக வருகை தரும் நோயாளர்கள் தனியார் வைத்தியசாலைகளின் பெருமளவான தொகையைச் செலவிட்டு கதிரியல் பரிசோதனைகளை மேற்கொள்கின்றனர். கதிரியல் பரிசோதனைக்கு பரிந்துரைக்கப்படும் நோயாளியின் நோய்த் தொடர்பில் பரிசோதனை செய்து உரிய காலத்திற்குள் சிகிச்சை அளிப்பது அவசியம். காலதாமதத்தால் உயிராபத்தும் அதிகரிக்கலாம்.

வைத்தியசாலை பணிப்பாளர் நாயகம் பதவிக்காக தகுதிவாய்ந்த ஒருவர் நியமிக்கப்படாமையால், கொழும்பு தேசிய வைத்தியசாலையின் நிர்வாகப்பணிகள் சீர்குலைந்துள்ளன. அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் உள்ள குளிரூட்டிக் கட்டமைப்பு செயலிழந்துள்ளமையால் சிகிச்சை சேவைகளும் மந்தமடைந்துள்ளது. வைத்தியசாலையின் பிரேத அறையிலும் குளிரூட்டியில் ஏற்பட்டுள்ள கோளாறு காரணமாக சடலங்களை வைத்திருப்பதிலும் பாரிய நெருக்கடி உருவாகியுள்ளது என்றார்.

## பலாலி இராஜ இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் வழிபாட்டுக்கு அனுமதி

### நேற்று முதல் வழங்கப்பட்டது

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலிருந்த பலாலி கிழக்கு அருள்மிகு ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் நாளாந்தம் பொதுமக்கள் வழிபாடு செய்ய நேற்று முதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இன்றிலிருந்து மக்கள் சுதந்திரமாக ஆலயத்துக்குச் சென்று வழிபட முடியுமென்றும் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

அந்தவகையில், அனுமதிக்கப்பட்ட நேற்று தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன், இராணுவ அதிகாரி உள்ளிட்ட பலரும் ஆலயத்தில் வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தனர்.











## ஈரான் மீதான தாக்குதலுக்கு மு.கா. தலைவர் கண்டனம்

ஈரான் இஸ்லாமியக் குடியரசின் மீது தொடர்ச்சியான வான்வழித் தாக்குதல்களை இஸ்ரேல் முன்னெடுத்துவருவது கண்டிக்கத்தக்கது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சர்வதேச சட்டம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் கொள்கை,கோட்பாடுகளுக்கு விதிவிலக்காக நடந்து கொள்ளும் வன்முறைக் கலாசாரத்திலிருந்து தோன்றிய நெதன்யாகு ஆளும்தரப்பு, ஜூன் 13, 2025 அன்று ஈரான் இஸ்லாமியக் குடியரசின் மீது தொடர்ச்சியான வான்வழித்தாக்குதல்களைநடத்தஆரம்பித்தது முற்றிலும் நியாயமற்ற மிகவும் கீழ்த்தரமான செயலாகும்.

இது ஈரானை ஸ்திரமற்ற தன்மைக்கு உள்ளாக்கவும், மத்திய கிழக்கு மற்றும் பரந்துபட்ட அந்தப் பிராந்தியத்தில் குழப்ப நிலையை ஏற்படுத்தவும் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள ஓர் அப்பட்டமான முயற்சியாகும்.

இஸ்ரேலினால் அதற்கு ஆதரவான நாடுகளின் ஒத்துழைப்புடன் ஈவிரக்கமற்ற முறையில் செயல்படுத்தப்படும் இந்தக் கொடூரமான செயலை நாங்கள் மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இவ்வாறான அடாந்தேற்றத்திற்கும், ஆக்கிரமிப்பிற்கும் எதிராக தன்னைத் தற்காத்துக்கொள்வதற்கான முழு உரிமையும் ஈரானுக்கு உண்டு. காசாவிலும் , மேற்குக் கரையிலும், கிழக்கு ஜெருசலத்திலும் பாலஸ்தீனர்களுக்கு எதிராக வன்முறையைத் தூண்டுவதற்கு பொறுப்பான நெதன்யாகு மற்றும் அவரது இனப்படுகொலைக் கும்பலின் கொடூரமான போக்கை எந்தவொரு நாடாவது கண்டுகொள்ளாது போல நடந்து கொள்வது உலகளாவிய அமைதிக்கும், பாதுகாப்பிற்கும் மிகவும் குந்தகமானதும், ஆபத்தானதுமாகும்.

ஈரானுக்கும் ,உலகின் எந்த நாட்டிற்கும் அணுசக்தியை உரிய முறையில் கையாள்வதற்கான உரிமை உண்டு. ஈரான் அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் ஒரு தரப்பாகும், மேலும் அது சர்வதேச அணுசக்தி அதிகார சபையின் பாதுகாப்பு வழிமுறைகளை ஏற்றுக்கொண்டுள்ளது.

எந்தக் காரணத்திற்காகவும், இராஜதந்திர ரீதியான பேச்சுவார்த் தைக்கான நெறி முறைகளை மீறி, எந்தவொரு நாட்டுக்கும் மற்றொருநாட்டிற்குஎதிராகஒருதலைப்பட்சமாக எவ்வாறான யுத்த நடவடிக்கையையும் தன்னிச்சையாக மேற்கொள்வதற்கு அறவே அதிகாரம் இல்லை.

முழு மத்திய கிழக்கையும் பேரழிவை ஏற்படுத்தக் கூடிய அணு ஆயுதங்கள் உட்பட , பயங்கர ஆயுதங்கள் அற்ற பிராந்தியமாகப் பிரகடனப்படுத்த வேண்டுமென்றும், பாலஸ்தீனத்தின் மீதான இஸ்ரேலின் சட்டவிரோத ஆக்கிரமிப்பு உடனடியாக முடிவுக்குக்கொண்டுவரப்படவேண்டுமென்றும் நாங்கள் கோருகின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## நாணய நிதிய பிரதி பணிப்பாளர் கீதா சனியிரவு வந்து சேர்ந்தார்

சர்வதேச நாணய நிதியத்தின் முதன்மை பிரதி முகாமைத்துவ பணிப்பாளர் கீதா இரண்டுநாட்கள் உத்தியோகபூர்வ பயணமாக சனிக்கிழமை இரவு நாட்டை வந்தடைந்தார்.

2005ஆம் ஆண்டுக்கு பின்னர் சர்வதேச நாணய நிதியத்தின் முதன்மை பிரதி நிர்வாக பணிப்பாளர் ஒருவர் இலங்கைக்கு வருகை தரும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். ‘இலங்கையின் மீட்பு பாதை – கடன் மற்றும் நிர்வாகம்‘ என்ற தொனிப்பொருளில் இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ள மாநாட்டில் அவர் கலந்து கொள்ளவுள்ளார்.

நிதி அமைச்சு மற்றும் மத்திய வங்கி இணைந்து இந்த மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளன. இலங்கை விஜயம் குறித்து தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள அவர், ‘இலங்கை, சிங்கப்பூர் மற்றும் இந்தோனேசியாவிற்கான எனது பயணங்களைத் தொடங்க கொழும்புக்கு வந்துள்ளேன். பிராந்தியத்திற்கான பொருளாதார சவால்கள் மற்றும் வாய்ப்புகள் மற்றும் சர்வதே நாணய நிதியத்தின் முயற்சிகளை எவ்வாறு ஆதரிக்க முடியும் என்பது குறித்து ஆராய்வதற்கு அதிகாரிகள், சிவில் சமூகம் மற்றும் வணிகத் தலைவர்களைச் சந்திக்க ஆவலுடன் காத்திருக்கிறேன்.

‘இலங்கையின் மீட்புப் பாதை : கடன் மற்றும் நிர்வாகம்‘ என்ற தலைப்பில் நடைபெறும் கூட்டு மாநாட்டிற்காக இலங்கைப் பயணத்தில் ஆர்வமாகவுள்ளேன். இந்த நிகழ்ச்சியின் மையப் புள்ளி, இலங்கையின் அனுபவத்திலிருந்து கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் வரவிருக்கும் சவால்களுக்கான அவற்றின் தாக்கங்கள் குறித்து கவனம் செலுத்துவதற்கான ஒரு சிறந்த வாய்ப்பைக் குறிக்கிறது’ எனத் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அதிக கவனிப்பும் அக்கறையும் தேவை

இலங்கை தற்போது எதிர்கொண்டும், சிக்கலான சுகாதாரக் கட்டமைப்பை மேலும் பரிதாபகரமாக்கும் வகையில் நான்கு பெரும் நோய்களின் தாக்கத்துக்குள்ளாகியுள்ளது. இவை – பருவகால காய்ச்சல் (seasonal influenza), டெங்கு, சிக்கின்குனியா மற்றும் புதிய கொவிட்–19 உட்பிரிவினால் ஏற்பட்டுள்ள ஆபத்துக்கள். இந்த நான்கு நோய்களும் ஒரே நேரத்தில் மக்கள் வாழ்வினை முற்றாகக் குழப்பும் அளவிற்கு உருவெடுத்து வருவதால், பொதுமக்கள் மட்டுமல்லாமல், மருத்துவ அமைப்புகளும், அரசும் முன்னெச்சரிக்கையுடன் செயல்பட வேண்டிய கட்டாயத்திற்குள்ளாகியுள்ளனர்.

பருவகால காய்ச்சல் ஒவ்வொரு ஆண்டும் ஆனி–ஆடி மாதங்களில் அதிகரிக்கும். ஆனால், இவ்வாண்டு நோயின் தீவிரம் கடந்த ஆண்டுகளைவிட அதிகமாக உள்ளது. பனிக்காய்ச்சலாக ஆரம்பித்து மூச்சுத் திணறல், உடல் வலிகள், மற்றும் பசியின்மை என பல்வேறு குறைபாடுகளை ஏற்படுத்தும் இந்த நோய், குழந்தைகள் மற்றும் முதியவர்கள் மத்தியில் மிக அதிக சிக்கல்களை ஏற்படுத்துகின்றது. இதனை தொடர்ந்து, டெங்குமற்றும்சிக்கன்குனியாநோய்களும்– இரண்டுமே நுளம்புகளின் வாயிலாக பரப்பப்படும் வைரஸ் நோய்கள் –பல மாவட்டங்களில் பரவி வருகின்றன.

அதற்கிடையில், இந்தியாவில் வேகமாக அதிகரிக்கின்ற புதிய கோவிட்–19 உட்பிரிவுகள் தொடர்பான தகவல்கள் இலங்கையில் ஆழ்ந்த கவலையைஏற்படுத்துகின்றன. கடந்தசிலமாதங்களாக இங்கு கொவிட் குறைந்திருந்தாலும், மீண்டும் இதன் மீட்டொலிப்பின்அறிகுறிகள்தோன்றத்தொடங்கியுள்ளன. குறிப்பாக, காய்ச்சல், தொண்டை வலி, மூச்சுத் திணறல், உடல் வலிகள் போன்ற அறிகுறிகளுடன் நோயாளிகள் மருத்துவமனைகளுக்கு வந்துவரும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான நிலைகளுக்கு எதிராக, ஆளும்தரப்பு மற்றும் சுகாதார அமைச்சு மூலமான தடுப்பு நடவழிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்படுகிறதா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. விழிப்புணர்வு நடவழிக்கைகள், மருந்துப் பராமரிப்பு, மருத்துவமனைகளின் சாத்தியமான ஏற்பாடுகள் போன்றவை மிகவும்தீவிரமாக இயங்க வேண்டிய அவசியம் இன்று ஏற்பட்டுள்ளது.

பொதுமக்களும் தங்களது கவனக்குறைவினை தவிர்த்து, தேவையான முன்னெச்சரிக்கைகளை கடைப்பிடிக்க வேண்டும். கொசுவினை கட்டுப்படுத்தும் வகையில் வீடுகளில் தண்ணீர் தேங்கி நிற்காத வகையில் பார்த்துக்கொள்வது, சிறுநீரகம் மற்றும் தொண்டைக் குறைபாடுகள் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவரை அணுகுவது, தடுப்பூசிகளை புதுப்பித்து வைத்திருப்பது போன்ற நடவடிக்கைகள் அவசியம்.

இன்றைய சூழ்நிலை ஓர் எச்சரிக்கைக் கூவல் மட்டுமல்ல. இது– நம்மைச் சீர்திருத்துமாறு அழைக்கும் ஒரு சமூக அழைப்பாகவும் பார்க்கப்படவேண்டும். நான்கு நோய்களின் சூழ்நிலையில் ஆரோக்கியமான நாட்களை நோக்கி பயணிக்கவேண்டுமெனில், அரசு, மருத்துவம், மக்கள் ஆகிய மூன்றும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டிய காலம் இது.

# நாடாளுமன்றம் நாளை கூடுகிறது



நாடாளுமன்றம் நாளை செவ்வாய்க்கிழமை முதல் ஜூன் 20 வெள்ளிக்கிழமை வரை கூடவுள்ளதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார். சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் கடந்தவாரம் கூடிய நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற அமர்வு இடம்பெறும் இந்த ஒவ்வொரு தினத்திலும் காலை 9.30 முதல் 10.00 மணி வரை நிலையியற் கட்டளை 22 இல் குறிப்பிடப்பட்டுள்ள நாடாளுமன்ற அலுவல்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. 10.00 மணி முதல் 11.00 மணி வரை வாய்மூல விடைக்கான வினாக்களுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் 11.00 மணி முதல் 11.30 மணி வரை நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் வினாக்களுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, நாளை 17 ஆம் செவ்வாய்க்கிழமை, 11.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை 2430/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரானசமவாயச்சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகளை அங்கீகரிப்பதற்காக விவாதத்துக்குஎடுத்துக்கொள்ளப்படவுள்ளது. அதனையடுத்து, 5.00 மணி முதல் 5.30 மணி வரை ஒத்திவைப்பு வேளையின் போதான வினாக்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மறுநாள் 18 ஆம் திகதி புதன் கிழமை 11.30 மணி முதல் 5.00 மணி வரை 2429/51 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட வெளிநாட்டு தீர்ப்புகளைப் பரஸ்பரம் ஏற்றங்கீகரித்தல், பதிவு செய்தல் மற்றும் வலுவுறுத்துதல் சட்டத்தின் கீழ் கட்டளைகளை அங்கீகரிப்பதற்காக விவாதத்துக்குஎடுத்துக்கொள்ளப்படவுள்ளது. அதனையடுத்து, 5.00 மணி முதல் 5.30 மணி வரை எதிர்க்கட்சியினால் முன்வைக்கப்படும் ஒத்திவைப்புவேளையின்போதானபிரேரணை விவாதத்துக்குஎடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

19 ஆம் திகதி வியாழக்கிழமை, 11.30 மணி முதல் 5.30 மணி வரை கறவை மாடு இறக்குமதி செயற்திட்டத்தின் மூன்றாம் கட்டத்தின் ஹுறு ஆம் பகுதியின் கீழ் 15,000 கறவை மாடுகளை இறக்குமதி செய்வதற்கான முற்பணம் வழங்குதல் தொடர்பான 2025.05.21 அன்று நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கை மற்றும் பத்தாவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடருக்கான 2025.06.04 அன்று நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அரசாங்கபொறுப்புமுயற்சிகள்பற்றிய (கோப்) குழுவின் இரண்டாவது அறிக்கை தொடர்பில் ஆளும் கட்சியினால் கொண்டுவரப்படும் ஒத்திவைப்பு விவாதம் இடம்பெறவுள்ளது.

20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, 11.30 மணி முதல் 5.00 மணி வரை 2429/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை, 2434/12 மற்றும் 2435/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிகளில் வெளியிடப்பட்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் இரண்டு ஒழுங்குவிதிகள் அங்கீகரிப்பதற்காக விவாதத்துக்குஎடுத்துக்கொள்ளப்படவுள்ளன. அதனையடுத்து, 5.00 மணி முதல் 5.30 மணி வரை ஆளும் கட்சியினால் முன்வைக்கப்படும் ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

அத்துடன், 2025.06.03 ஆம் திகதி முதலாவது மதிப்பீட்டுக்காக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வேலையாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனம் (திருத்தம்), வேலையாளர்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப்படி (திருத்தம்) மற்றும் வேலையாட்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப்படி (திருத்தம்) ஆகிய சட்டமூலங்களின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தை, அந்தச் சட்டமூலங்களுக்கு எதிராக அரசியலமைப்பின் 121வது பிரிவின் கீழ் உச்ச நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்படாவிட்டால், மேற்படி ஏற்கனவே திட்டமிடப்பட்ட அலுவல்களுக்கு மேலதிகமாக 2025.06.20 ஆம் திகதி 11.30 மணி முதல் 5.00 மணி வரை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள குழுவில் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இஸ்ரேல், ஈரான் நாடுகளின்

# இலங்கையர்களின் நாடு திரும்பும் கோரிக்கைகள் மீது தனிக் கவனம்

இஸ்ரேல் மற்றும் ஈரானில் உள்ள இலங்கைத் தொழிலாளர்களினால் முன்வைக்கப்படும் நாடு திரும்புவதற்கான கோரிக்கைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படுமென வெள விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையில் பதற்றம் அதிகரித்துள்ளமையினால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சு கூறியுள்ளது. இஸ்ரேல் மற்றும் ஈரான் வான்வெள கள் தற்போது மூடப்பட்டுள்ளன.

வான்வெள கள் மீண்டும் திறக்கப்பட்ட பின்னர் இலங்கைத் தொழிலாளர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை எடுக்கப்படும் என வெள விவகார அமைச்சு கூறியுள்ளது.

அவசர நிலைமைகள் தொடர்பில் அறிவிப்பதற்காக இஸ்ரேல் மற்றும் ஈரானில் உள்ள இலங்கையர்களுக்கென விசேட இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

0112 325 373 மற்றும் 0112 207 200 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பினை ஏற்படுத்தி மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ளமுடியும் என வெள விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் வெள விவகார அமைச்சின் இணையத்தளத்தின் மூலமாகவும் மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என அமைச்சு கூறியுள்ளது.

அம்பாறையில்

# காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் இன்று போராட்டம்

அம்பாறை - தம்பிலுவில் மத்திய சந்தைப் பகுதியில் இயங்கி வருகின்ற அம்பாறை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் அலுவலகத்தை உடனடியாக அகற்றுமாறு மக்களின் வாக்குகளைப் பெற்று தவிசாளராகிய சசிக்குமார் என்பவரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று காலை அம்பாறையில் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

கிளிநொச்சியில் வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் செய்தியாளர்கள் சந்திப்பு நேற்று நடைபெற்றபோதே சங்கத்தின் தலைவி கலாறஞ்சினி இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகளுக்கு இன்று வரை நீதி கிடைக்கவில்லை.இந்த அரசும் அதற்கான நீதியை பெற்று தருவதற்கு இது இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கவில்லை.

அம்பாறை- தம்பிலுவில் மத்திய சந்தை பகுதியில் இயங்கி வருகின்ற அம்பாறை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் அலுவலகத்தை உடனடியாக அகற்றுமாறு அதன் தலைவிக்கு மக்களின் வாக்குகளை பெற்று தவிசாளராகிய சசிக்குமார் என்பவரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து நாளை (இன்று) காலை அம்பாறையில் போராட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது.

இலங்கைக்கு வருகை தரும் ஐ.நா. பிரதிநிதி காணாமல் ஆக்கப்பட்டவர்களின்னன உறவினர்களைச் சந்திப்பதற்கும் செம்மணிப்புதை குழி மற்றும் கொக்குத்தொடுவாய் மன்னார் போன்ற புதைகுழிகளைப் பார்வையிடுவதற்கும் அழுத்தம் கொடுக்கவேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.









## மருந்துகள்....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்வை வழங்க சுகாதார அமைச்சால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், தற்போது இந்நிலைமை ஓரளவு கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளமையை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. மத்திய மருந்துகளஞ்சியசாலையில்உள்ளதரவுகளை மாத்திரம்கொண்டுஅரசமருத்துவமனைகளில் மருந்து தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக கூற முடியாது.

மருத்துவமனை மருந்து களஞ்சியசாலையில் தரவுகளும் எம்மிடம் உள்ளது. திடிரென மருந்து தட்டுப்பாடு ஏற்படுமாயின் அதனை நிவர்த்தி செய்ய அவசியமான செயற்திட்டமும் எம்மிடம் உள்ளது. மத்திய மருந்து களஞ்சியசாலையில் 180 மருந்துகளுக்கு தட்டுப்பாடுஏற்பட்டிருப்பினும்நோயாளிகளுக்கு வழங்கப்படும்மருந்துகளுக்கானபற்றாக்குறை ஏற்படாது. பிரதேசமருந்துகளஞ்சியசாலையில் தேவையான மருந்துகள் உள்ளன. மேலும் தேவை ஏற்படின் அவற்றை வெளியில் கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புற்றுநோய் சிகிச்சைக்குப் பின்னர், நோயாளருக்கு வழங்கப்படும் ஒரு வகை மருந்துக்கான மருந்து விநியோக செயல்பாடு கடந்த வாரம் நிறுத்தப்பட்டது. ஆகையால் அது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், மேலும் இரு வாரங்களில் 10 மாதங்களுக்கு தேவையான மருந்துகள் நாட்டை வந்தடைய உள்ளன. அவை கிடைக்கப்பெறும் வரை வைத்தியசாலைகளுக்குத் தேவையான மருந்தை பெற்றுக் கொள்ள பிறிதொரு நடவடிக்கையும் செயல்படுத்தப்பட்டுள்ளது என்றார்.

## முன்னால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுவனங்களும் பகிரங்கமாக ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

தனியார் நிதி நிறுவனத்துக்கு செலுத்தப்பட வேண்டிய 108,309,342 ரூபாயில், 4,080,000 ரூபா தொகை பிரதிவாதிகளால் செலுத்தப்பட்டுள்ளதால், மீதமுள்ளதொகையை வசூலிக்கும் நோக்கில் 2022 ஆம் ஆண்டு நவம்பர் 10 வழங்கப்பட்ட நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் இவை ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

தயா குழுமம் லிமிடெட், தயா அப்பரல் எக்ஸ்போர்ட்டர் (பிரைவேட்) லிமிடெட், ஒலிம்பஸ் கன்ஸ்ட்ரக் ஷன் பிரைவேட் லிமிடெட் ஆகிய நிறுவனங்கள் இவ்வாறு ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

## தெற்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தற்போதைய விசாரணைகளின் அடிப்படையில், பண கொடுக்கல் வாங்கல் தகராறு காரணமாக துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

கல்கிஸ்ஸை குற்றத் தடுப்பு பணியகம் மற்றும் கொஹூவல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## வவுனியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நினைக்கும் கட்சிகள் எமக்கு ஆதரவினை வழங்கும். எனவே மாநகர சபையின் ஆட்சியினை நாம் கைப்பற்றுவதற்கு எதிர்பார்த்திருக்கின்றோம் என்றார். 100

## சபைகளில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

தொழிலாளர் தேசிய முன்னணி மற்றும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தேசிய சபைக் கூட்டம் நேற்று ஹட்டனில் உள்ள ஒரு தனியார் மண்டபத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் தலைமையில் கூடிய பின்னர், செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கருத்து தெரிவித்ததாவது:

ஏனைய கட்சிகளுடன் இணைந்துதான் உள்ளூராட்சி மன்றங்களில் அதிகாரத்தை கைப்பற்றவேண்டும். ஆனால், உள்ளூராட்சி மன்றங்களில் அதிகாரத்தை நிறுவுவது தொடர்பாக இதுவரை எந்த அரசியல் கட்சியுடனும் பேச்சு நடத்தப்படவில்லை.

உள்ளூராட்சி மன்றங்களில் அதிகாரத்தை நிறுவுவது குறித்து விவாதிக்க எமது கூட்டணிக்கு பல அரசியல் கட்சிகள் அழைப்பு விடுத்திருந்தாலும், எவற்றுடனும் இதுவரை பேசவில்லை.

சில உள்ளூராட்சி மன்றங்களில் எமது அனுமதி இல்லாமல் உறுப்பினர்கள் சிலர் ஆதரவு வழங்கியுள்ளனர். அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

தொழிலாளர் தேசிய முன்னணியின் நிர்வாகக்குழுவில் இன்று பல புதியவர்களுக்குப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. முன்னணியின் செயலாளராக நகுலேஷ், பொருளாளராக ஷான் பிரபா, பரப்புரைச் செயலாளராக கல்யாண குமார் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர் - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு

- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்



தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

## முல்லை ஓய்வு நகர்
## Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்



முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.06.2025இல் வெளியிடப்பெற்றது